**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்.**

**முன்னிலை:** திரு. S. விஜய் ஆனந்த், B.E., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

2023- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு2054, ஸ்ரீசோபகிருது வருடம் ஆவணி மாதம் 19 ஆம் நாள்)

**இடைக்கால மனு எண். 373/2022**

**in**

**அசல் வழக்கு எண். 60/2022**

**CNR.No. TNTV04-000124-2022**

V. ராமச்சந்திரன் ..... மனுதாரர்/வாதி

/எதிர்/

V. ராமன் ..... எதிர்னுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 20.07.2023-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. R. அய்யப்பன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. முருகேசன், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற நிலுவையில் இருந்து வந்த இம்மனு மீது இன்று (05.09.2023) இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரரின் அமைதியான அனுபோகத்திற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்றும், அத்துமீறி பிரவேசித்து தாவா சொத்துக்களில் உழவு பணியை தடை செய்யக்கூடாது என

அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க உத்தரவிட வேண்டி கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி தாவா 1-வது அயிட்ட சொத்தினை நன்னிலம் தாலுக்கா, மாப்பிள்ளைக்குப்பம் புதுச்சேரி தெருவில் வசிக்கும் ஷண்முகம் மனைவி தமிழ்செல்விக்கு சொந்தமானதாக இருந்ததை மனுதாரர் கடந்த 14.06.1990-ல் கிரயம் பெற்று திருவாரூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1526/1990 ஆக பதிவு செய்யப்பட்டு வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார். தாவா 2-வது அயிட்ட சொத்தானது திருவாரூர் மாவட்டம், திருக்கரவாசல் வட்டம், கோமல் கிராமம், மெயின்ரோட்டில் வசிக்கும் பாலரவி மனைவியும், கோவிந்தசாமிபிள்ளை மகளுமான சாந்திக்கு சொந்தமானதாக இருந்து அதனை கடந்த 15.03.2006-ல் திருவாரூர் சார்பதிவக அலுவலகத்தில் ஆவண எண்.647/2006 ஆக பதிவு செய்யப்பட்டு வருவாய்த்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து மனுதாரர்/வாதி அனுபவித்து வருகிறார். தாவா சொத்துக்களானது மனுதாரர் மற்றும் அவரது மகன், மகளால் சாகுபடி செய்யப்பட்டு அனுபவிக்கப்பட்டு வருவதை உறுதி செய்யும் பொருட்டு விவசாய கடன்/விவசாய நகைக்கடன் பெறுவதற்கான சான்று, திருக்கரவாசல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா, அடங்கல் மனுதாரரை தவிர வேறு எவருக்கும் சொந்தமோ, உரிமையோ கிடையாது என்பதற்காக 01.01.1987 முதல் 08.09.2022 வரையிலான வில்லங்க சான்று ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் மனுதாரரின் சகோதரர் ஆவார். மனுதாரர் திருவாரூர் தாலுக்கா, தண்டலை தியானபுரத்தில் வசித்து வரும் நிலையில் அதனை சாதகமாக்கி கொண்டு இந்த எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களை விலைக்கு

கேட்க மனுதாரர் தனக்கு தாவா சொத்துக்கள் தேவைப்படுவதாக தெரிவித்து விற்பனை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டதால் அதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியினால் எப்படியாவது மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாவா சொத்தில் கடந்த 07.10.2022-ல் ஆட்கள் மூலமாக உழவு பணியை மேற்கொண்டு இருந்த போது அதனை பிரதிவாதி தடுக்கும் விதமான செயலில் ஈடுபட அதனை அறிந்த மனுதாரர் தனது மகன் மற்றும் அக்கம் பக்கத்தினர், வேலையாட்கள் உதவியுடன் பிரதிவாதியின் அத்துமீறிய செயலை தடுத்து நிறுத்திவிட்டார். அதனால் கோபம் கொண்ட எதிர்மனுதாரர் மீண்டும் தாவா இடத்திற்கு வந்து தனக்கு தாவா சொத்துக்களை விற்பனை செய்யாமல் நீ எப்படி சாகுபடி செய்கிறாய் பார்க்கிறேன் என்று சூளுரைத்து சென்றுள்ளார். பிரதிவாதி தாவா சொத்துக்களுக்கு முற்றிலும் அன்னிய நபர் ஆவார். அவருக்கு தாவா சொத்துக்களில் யாதொரு உரிமையோ, அனுபவமோ கிடையாது. இருப்பினும், எதிர்மனுதாரர் தாவா கிராமத்திலேயே வசித்து வருவதாலும், எதிர்மனுதாரர் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடக்கூடிய ஆள்பலம், பணபலம் மற்றும் அரசியல் செல்வாக்கு மிக்கவர் என்பதால் நீதிமன்ற தடை உத்தரவு இல்லாமல் சட்டத்திற்கு புறம்பான செய்கையை தடுத்து நிறுத்த இயலாது என்பதால், மனுதாரரின் அமைதியான அனுபோகத்திற்கு எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்றும், அத்துமீறி பிரவேசித்து தாவா சொத்துக்களில் உழவு பணியை தடை செய்யக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக ஏற்றுக்கொள்ள வேண்டி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு

பதிவு செய்யப்பட்டது.

4. **எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்** :-

எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற யாவற்று சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். எதிர்மனுதாரரும், மனுதாரரும் உடன் பிறந்த சகோதரர்கள் ஆவார்கள். மனுதாரர்/வாதி நீண்ட நாளாக திருவாரூர் விளமல் கிராமத்தில் வசித்துக் கொண்டும் அரசு மதுபான கடையில் பார் வைத்து நடத்தியும் நல்ல வசதியுடன் வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரர் நீண்ட நாளாக பிராதில் கண்ட சொத்தையும், மனுதாரருக்கு சொந்தமானதையும் பயிர் வைத்து சாகுபடி செய்து வருகிறார். மேற்படி உறவு என்ற முறையில் ஒவ்வொரு முறையும் சாகுபடிக்கான தொகையை பெற்றுக் கொண்டு வருகிறார். ஆகவே, எதிர்மனுதாரர் மனுவில் கண்ட நிலத்தையும் மற்றும் அதிகமானதையும் குடும்பத்துடன் சாகுபடி செய்தும் எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி மனுதாரர் பிராதில் கண்ட சொத்தும் மற்றும் அதிகமானதையும் விற்பதற்காக எதிர்மனுதாரர் கேட்ட பொழுது மேற்படி பிராதில் கண்ட சொத்தை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார். அந்த நிலையில் எதிர்மனுதாரரிடம் சொத்தை விற்க வேண்டாம் என நினைத்து மேற்படி பிராதில் கண்ட சங்கதிகளை பொய்யாக கூறி மனு தாக்கல் செய்துள்ளார். 07.10.2022-ல் மனுதாரர் தாவா சொத்தை எந்த காலத்தில் வந்து பார்க்கவில்லை. எதிர்மனுதாரர் மனுதாரரை அத்துமீறி தடுக்கவும் இல்லை. மேற்படி மனுதாரர் தாவா சொத்தை எதிர்மனுதாரரிடமிருந்து துராக்கிரதமாக பிடுங்கி அதிக விலைக்கு விற்கலாம் என்று நினைத்து பொய்யான காரணங்களை கொண்டு மனு தாக்கல் செய்துள்ளார். கடந்த 07.10.2022-ல் எந்தவித சம்பவமும் நடக்கவில்லை. மனுதாரருக்கு எதிர்மனுதாரிடம் எவ்வளவு நிலம் இருக்கிறது என்று சரியாக புரியாமல் மனுதாரரின் சொத்து குறைவு என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு அதிக சொத்து உள்ளது

என்பது மனுதாரருக்கே தெரியவில்லை. அதிலிருந்து தாவா சொத்துக்கு அருகில் வந்தது இல்லை என்று தெரிகிறது. மேலும், மனு சொத்தில் எதிர்மனுதாரருக்கு சம்பந்தம் இல்லை என்று கூறுவதும் யாதொரு உரிமையும், சுவாதீனமும் இல்லை என்று கூறுவதும் பொய்யானதாகும். மனுதாரருக்கு மனு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவம் இல்லை. மனுதாரர் அனுபவத்தில் எதிர்மனுதாரர் இடையூறு செய்தார் என்று சொல்வது உண்மையல்ல. மனுதாரர் பொய்யான தாவா கொடுத்து எதிர்மனுதாரரை மிரட்டி வழக்கிடை சொத்தை அனுபவம் எடுக்கலாம் என்று பொய் காரணங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், நடப்பு பசலிக்கு கிராம நிர்வாக அலுவலர் பிரதிவாதியின் அனுபவத்தை எடுத்துக்கூறி சிட்டா, அடங்கல் அளித்துள்ள விபரம் மனுதாரருக்கு தெரிந்தே பொய்யான காரணங்களை கூறி மனு தாக்கல் செய்திருப்பதால் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை</u> :-**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.

**7. <u>தீர்வு</u>** :-

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், தாவா 1, 2 அயிட்ட சொத்தினைப் பொறுத்து தாவா 1-வது அயிட்ட சொத்தினை ஷண்முகம் மனைவி தமிழ்செல்வியிடமிருந்து கடந்த 14.06.1990-ல் கிரயம் பெற்று திருவாரூர் சார்பதிவக ஆவண எண்.1526/1990 மூலம்

அனுபவித்து வருகிறார் என்றும், தாவா 2-வது அயிட்ட சொத்தினைப் பொறுத்து பாலரவி மனைவியும், கோவிந்தசாமிபிள்ளை மகளுமான சாந்தி என்பவருக்கு சொந்தமானதை கடந்த 15.03.2006-ல் கிரயம் பெற்று திருவாரூர் சார்பதிவக ஆவண எண்.647/2006 ஆக பதிவு செய்யப்பட்டு இரண்டு இன சொத்துக்களையும் அனுபவித்து வருகிறார் என்றும், மேற்படி சொத்தினை அனுபவித்து வருவதற்காக விவசாய கடன்/விவசாய நகைக்கடன் பெறறுவதற்காக திருக்கரவாசல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று, சிட்டா, அடங்கல் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரின் சகோதரர் என்றும், மனுதாரர் திருவாரூர் தண்டலை தியானபுரத்தில் வசித்து வரும் நிலையில் அதனை சாதகமாக்கி கொண்டு இந்த எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களை விலைக்கு கேட்க மனுதாரர் தாவா சொத்துக்கள் தனக்கு தேவைப்படுவதாக தெரிவித்து விற்பனை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டதால் அதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியினால் எப்படியாவது தனக்கு சொந்தமான தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 07.10.2022-ல் மனுதாரர் ஆட்கள் மூலமாக உழவு பணியை மேற்கொண்ட போது அதனை எதிர்மனுதாரர் தடுக்கும் விதமான செயலில் ஈடுபட அதனை அறிந்த மனுதாரர் தனது மகன் மற்றும் அக்கம் பக்கத்தினர், வேலையாட்கள் உதவியுடன் எதிர்மனுதாரரின் அத்துமீறிய செயலை தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், அதனால் கோபம் கொண்ட எதிர்மனுதாரர் மீண்டும் தாவா இடத்திற்கு வந்து தாவா சொத்துக்களை விற்பனை செய்யாமல் நீ எப்படி சாகுபடி செய்கிறாய் பார்க்கிறேன் என்று மிரட்டி சென்றுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களுக்கு முற்றிலும் அன்னிய நபர் என்றும், அவருக்கு தாவா சொத்துக்களில் யாதொரு உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும், எனவே தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**8.** எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் இந்த எதிர்மனுதாரரின் உடன் பிறந்த சகோதரர் என்றும், எதிர்மனுதாரர் நீண்ட நாளாக மனு சொத்தில் பயிர் சாகுபடி செய்து வருகிறார் என்றும், மனுதாரர் மேற்படி உறவு என்ற முறையில் ஒவ்வொரு முறையும் சாகுபடிக்கான தொகையை பெற்றுக் கொண்டு வருகிறார் என்றும், மனுதாரர் மனு சொத்தினை விற்பதற்காக எதிர்மனுதாரரிடம் கேட்ட பொழுது மனு சொத்தை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரரிடம் சொத்தை விற்க வேண்டாம் என நினைத்து பொய்யாக சங்கதிகளை கூறி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், கடந்த 07.10.2022-ல் மனுதாரர் தாவா சொத்தை எந்த காலத்தில் வந்து பார்க்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரை அத்துமீறி தடுக்கவில்லை என்றும், மனுதாரர் தாவா சொத்தை எதிர்மனுதாரரிடமிருந்து துராக்கிரதமாக பிடுங்கி அதிக விலைக்கு விற்கலாம் என்று நினைத்து பொய்யான காரணங்களை கொண்டு மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு எதிர்மனுதாரிடம் எவ்வளவு நிலம் இருக்கிறது என்று சரியாக புரியாமல் மனுதாரரின் சொத்து குறைவு என்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், நடப்பு பசலிக்கு கிராம நிர்வாக அலுவலர் எதிர்மனுதாரரின் அனுபவத்தை எடுத்துக்கூறி சிட்டா, அடங்கல் அளித்துள்ள விபரம் மனுதாரருக்கே தெரிந்தே பொய்யான காரணங்களை சொல்லி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு மனு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவம் இல்லை என்றும், ஆகவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

**9.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரரின் அமைதியான அனுபோகத்திலும், சுவாதீனத்திலும் உள்ள மனு சொத்தில் எதிர்மனுதாரரோ அவரது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்றும், அத்துமீறி பிரவேசித்து மனு சொத்துக்களில் உழவு பணியை தடை செய்யக்கூடாது என

அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளைப் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என்றும், எதிர்மனுதாரர் மனு சொத்துக்களை விலைக்கு கேட்க, மனுதாரர் மனு சொத்துக்கள் தனக்கு தேவைப்படுவதாக தெரிவித்து விற்பனை செய்ய இயலாது என தெரிவித்துவிட்டதால், அதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியினால் எப்படியாவது மனுதாரருக்கு சொந்தமான மனு சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் கடந்த 07.10.2022-ல் ஆட்கள் மூலமாக உழவு பணியை மேற்கொண்ட போது அதனை அறிந்த எதிர்மனுதாரர் வந்து பிரச்சனை செய்த போது மனுதாரர், தனது மகன் மற்றும் அக்கம் பக்கத்தினர், வேலையாட்கள் உதவியுடன் எதிர்மனுதாரரின் அத்துமீறிய செயலை தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், எதிர்மனுதாரர் மனு சொத்துக்களுக்கு முற்றிலும் அன்னிய நபர் என்றும், மனு சொத்துக்களில் யாதொரு உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வேண்டும் என்றும், மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரரின் உடன் பிறந்த சகோதரர் என்றும், எதிர்மனுதாரர் நீண்ட நாளாக மனு சொத்தை பயிர் வைத்து சாகுபடி செய்து வருகிறார் என்றும், மேற்படி உறவினர் என்ற முறையில் ஒவ்வொரு முறையும் சாகுபடிக்கான தொகையை பெற்றுக் கொண்டு வருகிறார் என்றும், மனுதாரர் மனு சொத்தினை விற்பதற்காக எதிர்மனுதாரரிடம் கேட்ட பொழுது மனு சொத்தை வாங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், அந்த நிலையில் எதிர்மனுதாரரிடம் சொத்தை விற்க வேண்டாம் என நினைத்து மேற்படி மனு சங்கதிகளை பொய்யாக கூறி மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், கடந்த 07.10.2022-ல் மனுதாரர் மனு சொத்தை எந்த காலத்தில் வந்து பார்க்கவில்லை என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரை அத்துமீறி தடுக்கவில்லை என்றும், மனுதாரர் மனு சொத்தை எதிர்மனுதாரரிடமிருந்து

பிடுங்கி அதிக விலைக்கு விற்கலாம் என்று நினைத்து பொய்யான காரணங்களை கொண்டு மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு மனு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவம் இல்லை என்றும், நடப்பு பசலிக்கு கிராம நிர்வாக அலுவலரால் இந்த எதிர்மனுதாரர் பெயருக்கு சிட்டா, அடங்கல் வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிர்மனுதாரர் தான் மனு சொத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், மனு சொத்து மனுதாரரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்பதற்காக மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆக கிரய சாசனம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரின் பெயரில் உள்ள நில உரிமை விபரம் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மனு சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனு சொத்து தொடர்பாக திருக்கரவாசல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பிலும், மனு சொத்தை தாங்கள் அனுபவம் செய்து வருவாக சொல்லப்படுகிறது. ஆகவே, மனுதாரர், எதிர்மனுதாரர் வாதத்திலிருந்து மேற்படி விஷயம் குறித்து இரு தரப்பு சாட்சியத்திலிருந்து தான் முடிவு செய்ய இயலும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இதில் முடிவு செய்யப்படும் பட்சத்தில் அது அசல் வழக்கிற்கு முடிவு காண்பது போல் ஆகும் என்பதை மாண்புமிகு உச்ச நீதிமன்றம், “Deoraj vs. State of Maharashtra and others.” என்ற வழக்கில்,

> “situations emerge where the granting of an interim relief would tantamount to granting the final relief itself and that the withholding of an interim relief in some cases would tantamount to dismissal of the main petition itself. “A test was laid by the Supreme Court in the said decision, as to the types of cases, in which, such an interim

> relief could be granted. After pointing out that such cases would be very rare and exceptional, the Supreme Court said "the Court would grant such an interim relief only it satisfied that withholding of it would prick the conscience of the court and do violence to the sense of justice, resuliting in injustice being perpetuatede throughout the hearing and at the end, the Court would not be able to vindicate the cause of justice."

என்று சொல்லியுள்ளதை கருத்தில் கொண்டும், இம்மனுவில் முடிவு செய்வது நீதிக்கு உகந்ததாக இருக்காது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**10.** முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05 ஆம் நாள் என்னால் இவ்வவையறியப்பகரப்பட்டது.

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

<u>மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>

- இல்லை -

<u>மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.1 14.06.1990 வாதிக்கு தமிழ்ச்செல்வி என்பவர் எழுதிக்கொடுத்த சுத்தக் கிரயசாசனம் அசல்.

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 15.03.2006 | வாதிக்கு சாந்தி என்பவர் எழுதிக்கொடுத்த சுத்தக் கிரயசாசனம் அசல். |
| ம.சா.ஆ.3 | 13.09.2022 | புல எண்.165/5-க்கான நில உரிமை விபரம் கணினி நகல். |
| ம.சா.ஆ.4 | 01.01.1987 முதல் 08.10.2022 | தாவா சொத்து தொடர்பான வில்லங்க சான்று கணினி நகல். |
| ம.சா.ஆ.5 | - | திருக்கரவாசல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நகல். |
| ம.சா.ஆ.6 | - | திருக்கரவாசல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று நகல். |

<u>எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சான்றாவணங்கள்</u>

- இல்லை -

(ஒம்/- S. விஜய் ஆனந்த்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.